தஞ்சாவூர் மாவட்டம், இலுப்பக்கோரை, வெள்ளாளர் தெரு என்.ரமணன், ஜெ.ராணிஜெயரஞ்சன் இவர்களது தந்தையும், தமிழ்நாடு மாநில திட்டக் குழு துணைத்தலைவர் ஜெ.ஜெயரஞ்சன் அவர்களது மாமனாருமான என்.நாகராஜன் அவர்கள் 14.10.25 அன்று செவ்வாய்க்கிழமை காலை இயற்கை எய்தினார். கழகத் துணை பொதுச்செயலாளர், மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா எம்.பி. கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினார். பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், மின்னம்பலம் ஆசிரியர் அ.காமராஜ், மு.ராஜகாந்தம், வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், து.ஆதவன் ஆகியோர் உள்ளனர்.

ஈரோடு மாவட்டம், காங்கேயம் சட்டமன்றத் தொகுதி பசுவப்பட்டி, அம்மன் காட்டேஜில், கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு மிகை ஊதியம் மற்றும் பங்கு ஈவுத்தொகையினை அமைச்சர், மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன், எஸ்.ஆர்.எஸ்.செல்வம், சி.பிரபு, எஸ்.எம்.ராமசாமி உள்பட சங்க உறுப்பினர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

ஜாதி ஒழிப்புக்கான முக்கிய மைல்கல்! ஆணவக் கொலை தடுப்புக்கான சட்டம் இயற்ற ஆணையம் அமைத்துள்ள

‘திராவிட மாடல்’ முதலமைச்சருக்கு கருஞ்சட்டைகளின் ‘டபுள் சல்யூட்!’

திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, அக்.18-

ஆணவக் கொலை தடுப்புக்கான சட்டம் இயற்ற ஆணையம் அமைத்துள்ள ‘திராவிட மாடல்’ முதலமைச்சருக்கு கருஞ்சட்டைகளின் ‘டபுள் சல்யூட்!’ என்று திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு :-

நேற்று (17.10.2025) காலை தமிழ்நாடு சட்டப் பேரவையில் ‘திராவிட மாடல்’ ஆட்சியின் மானமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “ஆணவக் கொலைகள் தடுப்புக்கான சட்டமொன்றை இயற்றிட, ஓய்வு பெற்ற நீதிபதி ஜஸ்டிஸ் கே.எம்.பாஷா

அவர்கள் தலைமையில் ஒரு தனி ஆணையம் அமையும். அதன் வழிகாட்டுதலையொட்டி, அடுத்து ஆணவக் கொலைத் தடுப்புச் சட்டம் உருவாகும்” என்று விடுத்துள்ள இந்த அறிவிப்பு, இந்தியாவிற்கே வழி காட்டும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பிரகடனம் ஆகும்!

இதுபற்றி சட்டப்பேரவையில் அவர் உரை யாற்றும்போது, (அண்மையில் 13 நாள்களுக்கு முன்பு) செங்கல்பட்டு - மறைமலை நகரில் நடைபெற்ற நமது சுயமரியாதை இயக்க நூற்றாண்டு நிறைவு விழா மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் ஜாதி ஒழிப்புக்கான முக்கிய நடவடிக்கையாக ஆணவக் கொலையைத் தடுக்கச் சட்டம் நிறைவேற்றக் கோரும் தீர்மானத்தை முக்கியமாகக் குறிப்பிட்டு, இச்சட்டத்தின் தேவைபற்றிக் கூறியது நம்மை மெய்சிலிர்க்கச் செய்தது. 1929 செங்கல்பட்டு சுயமரியாதை இயக்க முதல் மாகாண மாநாட்டின் தீர்மானங்களைச் சட்டமாக்கிட 40 முதல் 60 ஆண்டுகள் ஆயின.

4.10.2025 செங்கல்பட்டு மறைமலைநகர் சுயமரியாதை இயக்க நூற்றாண்டு நிறைவு விழா மாநாட்டுத் தீர்மானங்கள் அடுத்த 13 நாள்களில் செயல்பாட்டுக்கு வர ஏற்பாடுகள் தொடக்கம்!

என்னே வேகம்! என்னே விவேகம்!!

இதுதான் ‘திராவிட மாடல்’ ஆட்சியின் மாட்சி!

கருஞ்சட்டையினருக்கு ‘முதல் சல்யூட்’ அளித்த எங்கள் ஒப்பற்ற முதலமைச்சர் அவர்களே, இந்த ஜாதி ஒழிப்பு முயற்சிக்கான ஆணவப் படுகொலை தடுப்புச் சட்ட ஏற்பாட்டுக்கான முன்னெடுப்புக்கு எங்களது ‘டபுள் சல்யூட்’ - வாழ்த்துகள்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம் சார்பில்

“எதிர்கால மருத்துவம் 2.0” இரண்டாவது பன்னாட்டு மருத்துவ மாநாடு!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

சென்னை, அக்.18-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (16.10.2025) சென்னை, நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழக சார்பில் மருத்துவத்தின் எதிர்காலம் எனும் தலைப்பில் (Future of Medicine) “எதிர்கால மருத்துவம் 2.0“ இரண்டாவது பன்னாட்டு மருத்துவ மாநாடு தொடங்கி வைத்து, மின் இதழை வெளியிட்டு, துணை வேந்தர் மரு. நாராயணசாமி அவர்கள் இயற்றிய “நவீன மருத்துவ முன்னேற்றத்தில் செயற்கை நுண்ணறிவின் பங்கு” எனும் நூலினை வெளியிட்டு, மாநாட்டு மலர் மற்றும் ஆராய்ச்சி கட்டுரைகளின் தொகுப்பு வெளியிட்டு விழா பேரூரையாற்றினார்.

அவர் ஆற்றிய உரை வருமாறு:

சர்வதேச மருத்துவ மாநாடு - எதிர்கால மருத்துவம் 2.0 தொடக்கம்

19.01.2024 முதல் 21.01.2024 வரை 3 நாட்கள் “மருத்துவத்தின் எதிர்காலம்” (Future of Medicine) எனும் தலைப்பில் முதலாவது பன்னாட்டு மருத்துவ மாநாடு வெற்றிகரமாக நடைபெற்றது. இதில் அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி, சிங்கப்பூர், கத்தார், ஆஸ்திரிலேயா மற்றும் கனடா ஆகிய 7 நாடுகளில் இருந்தும், இந்தியா முழுவதும் இருந்தும் மொத்தம் 210 மருத்துவ நிபுணர்கள் நேரடியாகவும், காணொளி வாயிலாகவும் கலந்து கொண்டு உரை நிகழ்த்தியிருக்கிறார்கள். மருத்துவம், பல் மருத்துவம், ஆயுஷ் மருத்துவம் போன்ற 27 சிறப்பு மருத்துவ அமர்வுகள், 5 குழு விவாதங்கள், 50 இணை அமர்வுகளுடன் 11,000 மாணவர்கள் கலந்து கொண்டு, 600 அறிவியல் ஆராய்ச்சி சுருக்கங்கள் வெளியிடப்பட்டது. அந்த வெற்றியின் தொடர்ச்சியாக, இன்று தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவ பல்கலைக்கழகம், சர்வதேச மருத்துவ மாநாடு - எதிர்கால மருத்துவம் 2.0, 16.10.2025 முதல் 18.10.2025 வரை 3 நாட்கள் சென்னை வர்த்தக மைய வளாகத்தில் தொடங்கி வைக்கப்பட்டது. இம்மாநாட்டில் சுமார் 9,000க்கும் மேற்பட்ட மருத்துவ வல்லுநர்கள் மற்றும் மருத்துவம், பல் மருத்துவம், ஆயுஷ், செவிலியர், மருந்தியல், மறுவாழ்வு அறிவியல், மருத்துவம் சார்ந்த துணை படிப்புகள் சார்ந்த இளங்கலை, முதுகலை மற்றும் ஆராய்ச்சி மாணவ மாணவியர்கள் பங்கேற்கின்றனர். இம்மாநாட்டில் 207க்கும் மேற்பட்ட சர்வதேச, தேசிய மற்றும் மற்ற மாநில புகழ்பெற்ற மருத்துவ வல்லுநர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி, ஆஸ்திரேலியா, சிங்கப்பூர், கத்தார், ஐக்கிய அரபு நாடுகள், புரூனே மற்றும் இலங்கை போன்ற 9 நாடுகளை சேர்ந்த 38 சர்வதேச மருத்துவ வல்லுநர்கள் கலந்துகொள்ள உள்ளனர். மேலும் புதுதில்லி, மணிப்பூர், சண்டிகர், புதுச்சேரி, தமிழ்நாடு, சென்னை, ஹைதராபாத், கர்நாடகா, கேரளா, மேகாலயா, அசாம் போன்ற பிற மாநிலங்களை சேர்ந்த 169 மருத்துவ வல்லுநர்கள் கலந்து கொண்டு எதிர்கால மருத்துவம் குறித்து பேச உள்ளனர். இம்மாநாட்டில் 14 இணைய வழியாகவும், 12 குழு விவாதங்களும் நடைபெறவுள்ளது. இம்மாநாட்டில் மருத்துவம் சார்ந்த 384 தேர்ந்தெடுக்கப்பட்ட பதாகை விளக்கக்காட்சிகளும், 244 வாய்மொழி படைப்புகளும் இடம் பெற வுள்ளது. இம்மாநாட்டில் மருத்துவம், பல் மருத்துவம், ஆயுஷ், செவிலியர், மருந்தகம், மறுவாழ்வு அறிவியல் மற்றும் மருத்துவம் சார்ந்த துணை மருத்துவப் படிப்புகள் உள்ளிட்ட 150 சிறப்பு அமர்வுகள் நடைபெற உள்ளது. இம்மாநாட்டில் பன்னாட்டு மருத்துவ வல்லுநர்களால் நடத்தப்படுகின்ற 18 திறன்மேம் பாட்டு செயல்முறைகளும், தேசிய மருத்துவ வல்லுநர்களால் நடத்தப்படுகின்ற 14 திறன்மேம்பாட்டு செயல்முறைகளும், Robatic அறுவை சிகிச்சை முறைகளை உள்ளடக்கிய மொத்தம் 32 திறன்மேம்பாட்டு செயல்முறைகளும் மற்றும் சுமார் 8 இணை அமர்வுகளும் நடைபெற உள்ளது. தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகம் மற்றும் VIT (நிகர்நிலை பல்கலைகழகமும்) இணைந்து மருத்துவ பொறியியல் தொழில்நுட்பம் மற்றும் மருத்துவ உயிரியக்கவியல் பயிலரங்கு நடத்த உள்ளது. இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்கள் மற்றும் மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த ஆசிரியர்களால் பல்வேறு சிறப்புகளில் மருத்துவத்தின் எதிர்காலம் என்ற கருப்பொருளில் சுமார் 787 அறிவியல் ஆராய்ச்சி சுருக்கங்கள் இடம் பெற உள்ளது. இம்மாநாட்டின் முக்கிய கருப்பொருளான அவசர மருத்துவ சிகிச்சை, புற்றுநோய் மருத்துவம் சிகிச்சை மற்றும் நாள்பட்ட நோய்கள் குறித்தும், மருத்துவ ஆராய்ச்சி செய்முறை விளக்க கருத்தரங்கள், விரிவாக விவாதங்களும் மற்றும் செயல்முறை விளக்கங்களும் இந்த மாநாட்டில் இடம் பெறும்.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் விழா பேரூரையாற்றினார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழக துணை வேந்தர் மரு.நாராயணசாமி, மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சுகந்தி இராஜகுமாரி, கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை இயக்குநர் மரு.பார்த்தசாரதி, பன்னாட்டு மருத்துவ பேராசிரியர்கள் மரு.ரெபேக்கா மில்லர், மரு.கபிலன் தர்மராஜன், மரு.நாகலிங்கம் வர்ணகுலேந்தரன் மற்றும் மருத்துவப் பேராசிரியர்கள், மருத்துவ மாணவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

சட்டப்பேரவையில் இந்து சமயம் மற்றும் அறநிலை கொடைகள் திருத்த சட்ட முன்வடிவில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேச்சு!

சட்டத் திருத்தத்தால் திருக்கோயில் நிலங்களுக்கு பாதுகாப்பு கிடைக்கும்!

சென்னை, அக்.18-

சட்டப்பேரவையில் இந்து சமயம் மற்றும் அறநிலை கொடைகள் திருத்த சட்ட முன்வடிவில் உறுப்பினர்கள் விவாதத்திற்கும் பிறகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு பதிலளித்து பேசியதாவது:-

இந்த சட்டமுன்வடிவை ஆணித்தரமாக ஆதரித்து பேசிய அருமை ஈஸ்வரன் அவர்களுக்கும் அன்பிற்கினிய காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய சட்டமன்றப் பேரவை உறுப்பினர் செல்வபெருந்தகை அவர்களுக்கும், அதேபோல், இதிலிருக்கின்ற குறை நிறைகளைச் சுட்டிக்காட்டியிருக்கின்ற சட்டமன்றப் பேரவை உறுப்பினர் தி.வேல்முருகன் அவர்களுக்கும் முழுமையாக சட்டத்தைப் படிக்காமலேயே தங்களுடைய கட்சியின் நிறுவனர்கள், தலைவர்கள் கொண்டு வந்த திட்டத்தையே மறந்து, அந்த திட்டத்தை மீண்டும் நீங்கள் செயல்படுத்துவதற்கு சட்டத்திருத்தம் கொண்டு வரலாமா? என்று கேட்ட அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கும், எழுதிகொடுத்த ந.தளவாய் சுந்தரம் அவர் ஆன்மிகம் மற்றும் சிந்தனைக்கு உரியவரான யோசனைக்குரிய ம. சிந்தனை செல்வம் அவர்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய மகிழ்ச்சியையும் நன்றியையும் பகிர்ந்து கொள்கிறேன்.

குறிப்பாக, காரணவிளக்க நோக்கத்தை முழுமையாக நம் அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் படித்தார்களா என்று தெரியவில்லை. ரூ.5 கோடி வரை அறங்காவலருக்கு அனுமதியளிக்கப்படுகிறது என்று எங்கும் வார்த்தை இடம் பெறவே இல்லை. அறங்காவலருடைய பொறுப்பு என்னவென்றால், கொண்டுவரப்படுகின்ற திட்டங்களுக்கு அரசிற்கு முன்மொழிவை அனுப்புவதுதான் அறங்காவலருடைய பொறுப்பே தவிர இத்தனை கோடியில்தான் அவர்களுக்கு வரைமுறை என்பது சட்டத்தில் எங்கும் இடமில்லை.

அதேபோல், கல்லூரிகளுக்கு கல்வி நிதியை பயன்படுத்தலாமா என்ற கேள்வியை வைத்தார். மறைந்த புரட்சி நடிகர் காலத்திலேயே பழனி திருக்கோயில் கல்லூரிக்கு நிதியொதுக்கப்பட்டு, வகுப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. மறைந்த முன்னாள் முதல்வர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அதே பழனியிலும், கன்னியாகுமரியிலும் இருக்கின்ற கல்லூரிகளில் வகுப்பறைகள் கட்டப்பட்டு நம்முடைய உயர் கல்வித் துறை அமைச்சராக இருந்த அன்பழகன் அவர்களே திறந்துவைத்த கல்வெட்டுகள்கூட புகைப்படங்களாக இருக்கின்றன.

ஆகவே வரலாற்றை மறந்து, அவர்கள் ஏற்றுக் கொண்ட அந்த கொள்கைக்கு முரணாக கருத்து பதிவிட்டிருக்கின்றார் என்பதை இந்த அவையிலே பதிவிட கடமைப்பட்டிருக்கின்றேன். அடுத்து, திருக்கோயிலினுடைய பழக்கவழக்கங்கள் என்று சொல்லப்படுகின்ற வேதபாராயணம் மற்றும் ஆத்தியபாகம் ஏற்கெனவே சட்டப்பிரிவு 36ல் இருக்கின்றது.

இது ஒன்றும் புதிதாக கொண்டுவரப்படவில்லை. தற்போது கொண்டுவரப்பட்டிருக்கின்ற சட்டப் பிரிவினுடைய திருத்தம், என்னவென்றால், இந்த பள்ளிகளுக்கு கட்டடங்கள் கட்டுவதற்கு திருக்கோயிலினுடைய உபரி நிதியை பயன்படுத்துவதற்காகத்தான் பாதுகாப்பு கருதி இந்த சட்டப்பிரிவு கொண்டுவரப்பட்டிருக்கின்றது.

அடுத்து, ந.தளவாய் சுந்தரம் எழுதிகொடுத்த மற்றொன்று உச்சநீதிமன்றத்திலே வழக்கு நிலுவையில் இருக்கின்றபொழுது, இங்கே ஒரு சட்டத்திருத்தம் கொண்டு வரலாமா என்று கேட்டார். உச்ச நீதிமன்றத்திலே நிலுவையில் இருக்கின்ற வழக்கு திருமண மண்டபங்களுக்கும், வணிக கூடங்களுக்கும் உண்டான வழக்கு. நாங்கள் மேல் முறையீட்டிற்கு சென்றிருக்கின்றோம். எங்கும் இந்த சட்டத்திருத்ததில் ஓர் இடத்தில்கூட திருமண மண்டபம் என்றோ அல்லது வணிக மண்டபங்கள் என்றோ எங்கும் ஓர் இடத்தில்கூட குறிப்பிடப்படவில்லை.

நாங்கள் கொண்டு வந்திருக்கின்ற சட்டத் திருத்தத்தால் திருக்கோயில் நிலங்களுக்கு பாதுகாப்பு கிடைக்கும். மேலும், திருக்கோயில்களின் உபரி நிதிகளை, திருக்கோயில்களின்வசம் இருக்கின்ற நிலங்களில், அந்தத் திருக்கோயில்களின் பயன்பாட்டிற்காக வருமானத்தைப் பெருக்குவதற்குண்டான வழிவகைகளைக் காண்பதற்காகத்தான் இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம்.

அதே நேரத்தில், உயர் நீதிமன்றத்தில் இரண்டு நீதிபதிகள் அடங்கிய அமர்வு, நீங்கள் உபரி நிதிகளைப் பயன்படுத்துவதற்கும், திருமண மண்டபங்கள் கட்டுவதற்கும் சட்டத் திருத்தம் கொண்டு வந்து அந்தப் பணிகளை மேற்கொள்ளலாமே! என்று சொல்லியிருக்கிறது. இந்த ஆட்சி சட்டத்தை மதிக்கின்ற ஆட்சி. இது சட்டத்தின் ஆட்சி என்பதால், மிகவும் பொறுமையோடு அந்த வார்த்தைகளை இந்த இடத்தில் பயன்படுத்தாமல் இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம்.

பல திருக்கோயில்களுக்கு திருவிழாக்களுக்கு, அன்றாடம் நடைபெற வேண்டிய பூஜைகளுக்கு என நிலங்களை முன்னோர்கள் எழுதி வைத்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள். அந்த நிலங்கள் விவசாயத்திற்குக் கூட பயன்படுத்த முடியாத நிலையில் இருக்கிற தரிசு நிலங்களாகும். அந்த நிலங்களில் திருக்கோயில்களுடைய வருமானத்திற்காக கூடுதலாக கட்டடங்கள் கட்டுவதற்குக் காரணம் என்னவென்றால், அந்தத் திருக்கோயில்களுடைய நிலங்கள் யாருடைய ஆக்கிரமிப்பிற்கும் செல்லாமல் இருக்கும் என்பதற்காகத்தான்.

திருக்கோயில்களுடைய நிலங்களில் மக்களுடைய பயன்பாட்டிற்காக கட்டடங்கள் கட்டப்படுகின்ற போது, அந்தத் திருக்கோயில்களுக்கு வருமானம் வரும். அதனால், அத்திருக்கோயில்களில் தினந்தோறும் ஐந்து கால பூஜைகள் நடைபெறும் என்ற உயரிய நோக்கத்தில்தான் இந்தச் சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இந்தச் சட்டத் திருத்தத்தைப் பாராட்டிய அனைத்து மாமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இந்தச் சட்டத் திருத்த மசோதாவை நிறைவேற்றித் தருமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேசினார்.

தீப ஒளியை முன்னிட்டு

சென்னை மண்டலங்களில் 116 ஒருகால பூசைத் திட்டம்!

திருக்கோயில்களுக்கு வேட்டி புடவைகள் வழங்கப்பட்டன!

சென்னை, அக். 18-

இந்து சமய அறநிலையத் துறை சட்டமன்ற அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில் நேற்று (17.10.2025) பாடி, திருவல்லீஸ்வரர் திருக்கோயிலில் கூடுதல் ஆணையர் திருமதி சி. கல்யாணி சென்னை மண்டலங்களைச் சேர்ந்த 116 ஒருகால பூசைத் திட்ட திருக் கோயில்களின் இறைவன் மற்றும் இறைவிக்கு சாற்றுபடி செய்வதற்கு பருத்தி புடவை மற்றும் வேட்டிகளை அர்ச்சகர்கள் மற்றும் பூசாரிகளிடம் வழங்கினார்.

2025 - 2026 ஆம் நிதியாண்டிற்கான சட்டமன்ற மானியக் கோரிக்கையில், “திருக்கோயில்களில் காணிக்கையாக பெறப்படும் உபரி பருத்தி புடவை மற்றும் வேட்டிகளை ஒரு காலபூசைத் திட்ட திருக்கோயில்கள், கிராமக் கோயில்கள், ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் வசிக்கும் பகுதியில் உள்ள திருக்கோயில்கள் உள்ளிட்ட திருக்கோயில்களுக்கு இறைவன், இறைவி திருவுருவங்களுக்கு சாற்றுப்படி செய்வதற்கு தேவையின் அடிப்படையில் ஆண்டுதோறும் தீபாவளி மற்றும் தைப் பொங்கல் திருநாளுக்கு முன்பாக வழங்கப்படும்.” என அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில், இந்து சமய அறநிலையத் துறை கூடுதல் ஆணையர் திருமதி சி. கல்யாணி அவர்கள் இன்றைய தினம் திருக்கோயில்களில் உபரியாக உள்ள பருத்தி புடவை மற்றும் வேட்டிகளை சென்னை மண்டலங்களைச் சேர்ந்த 116 ஒருகால பூசைத் திட்ட திருக்கோயில்களின் அர்ச்சகர்கள் மற்றும் பூசாரிகளிடம் வழங்கினார். இத்திட்டத்தின் தமிழ்நாடு முழுவதும் 6,117 திருக்கோயில்கள் பயன்பெறுகின்றன.

இந்நிகழ்ச்சியில் சென்னை மண்டல இணை ஆணையர்கள் திருமதி கி. ரேணுகாதேவி, சு.மோகனசுந்தரம், திருமதி ஜ.முல்லை, உதவி ஆணையர்கள் க.சிவக்குமார், கி.பாரதிராஜா, திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் வானவில் ஆர்.விஜய், அறங்காவலர் ஹரி கோவிந்தன் மற்றும் திருக்கோயில் செயல் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் Tamil Nadu Cyclist Association உடன் இணைந்து மக்களிடையே உடல் நலம் பேணுதல், உடற் பயிற்சி மேற்கொள்ளுதல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமை அன்று காலையில் மாநகராட்சியின் குறிப்பிட்ட சாலைகளில் நடத்தப்படும் மிதிவண்டி ஓட்டம் மற்றும் நடை ஓட்டத்தில் பங்கு பெறுபவர்களுக்காக தயாரிக்கப்பட்ட டி.சர்ட்டினை, ரிப்பன் கட்டட கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மேயர் திருமதி ஆர்.பிரியா, நேற்று (17.10.2025) அறிமுகப்படுத்தினார். இந்நிகழ்வில் துணை மேயர் மு.மகேஷ்குமார் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

சென்னை தெற்கு மாவட்டம், ஆதம்பாக்கம் சி.எஸ்.ஐ.பள்ளி மாணவ மாணவிகளுக்கு தீப ஒளி திருநாளை முன்னிட்டு,இனிப்பு மற்றும் பட்டாசுகளை வேளச்சேரி மேற்கு பகுதி சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணை அமைப்பாளர் எஸ்.நஜிம் வழங்கினார்.உடன் பகுதி பிரதிநிதி உ.சிவா, நிலோபர், உமா மகேஸ்வரி, திருநாவுக்கரசு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.